# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 21

விலை 20/=

ஐப்பசி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 21

E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532


**"நன்மை செய்யும் அனைவருக்குமே பெருமையும், மாண்பும், அமைதியும் கிடைக்கும்" (உரோ 2: 10)**

## ஆயரின் செய்தி

ST. FRANCIS XAVIER'S SEMINARY LIBRARY COLUMBUTHURAI



**இயேசுவில் அன்புள்ளங்களே**

இறைவன் எமது வாழ்வில் செய்துவரும் ஒவ்வொரு நன்மைகளுக்கும் நன்றிகூறி உங்களோடு சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எமது மறைமாவட்டம் மேலும் வளர நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிகளுக்கும் ஆதரவு தரும் குருக்கள், துறவற சகோதர சகோதரிகளுக்கும், பொதுநிலை விசுவாசிகளுக்கும் நன்றி.

இம்மாதம் 7ம் திகதி தூய செபமாலை அன்னையை நினைவு கூறுகிறோம். வைகாசி, ஐப்பசி மாதங்கள் கத்தோலிக்கர் எமக்கு மரியன்னையின் வணக்க மாதமாகும். இம் மாதங்களில் நாம் சிறப்பாக ஆலயங்களிலும் இல்லங்களிலும் செபமாலைத் தியானத்தில் ஈடுபடுவதுண்டு. மீட்பு வரலாற்றிலே மரியா பெரும் பங்காற்றியிருக்கிறார். அவரது பணிவு, நம்பிக்கை, 'அர்ப்பணம் இன்று எமக்கு உதாரணமாகவும் வாழ்வாகவும் அமைந்துள்ளது. தனித்த குடும்ப செபமலைத் தியானங்களை நாம் உற்சாகப்படுத்தி ஆன்மீகத்தில் வளர்வோம்.

ஒக்டோபர் 1ம் திகதி குழந்தை இயேசுவின் புனித தெரேசம்மாளின் விழா. 19ம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்த இவர் 24 வயதில் காச நோயினால் இறந்தார். பணிவு, ஏழ்மை, குழந்தை உள்ளம் கொண்டவராக இவர் வாழ்ந்தாலும் விளம்பரத்தை சிறிதும் விரும்பியதில்லை. ஆனால் மரணத்திற்குப்பின் **'ஒரு ஆன்மாவின் கதை'** எனும் புனித தெரேசாள் எழுதிய சுயசரிதையை இவரது சகோதரிகள் பகிரங்கப்படுத்தினார்கள். இவ்வாறு புனித தெரேசாவின் புனிதம் நிறைந்த வாழ்வு, தூய்மை, நம்பிக்கை போன்றவற்றை உலகம் அறிந்தது. இன்று இவர் மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலியாகத் திகழ்கின்றார்.

இந்த தினத்திலே புனிதரின் பெயர்கொண்ட விழாவை சிறப்பிக்கும் மூதூர் கார்மேல் இல்ல சகோதரிகளையும், அன்னை தெரேசா சகோதரிகளையும் நாம் வாழ்த்துகின்றோம்.

2ம் திகதி தூய காவல் தூதர்கள் விழா. செப்டம்பர் மாதம் 29ம் நாள் உயர்தேவதூதர்களான மிக்கேல், கபிரியேல், ரபேல் விழாவை நாம் சிறப்பித்தோம். காவல் தூதர்கள் எம்மைப் பாதுகாக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? எம்மைப் படைத்த இறைவன் எமக்குத் தேவையான பாதுகாப்பையும் தருகிறார். எனவே கிறிஸ்தவர் நாம் காவல்தூதர்களின் மூலமாக எமக்குக் கிடைக்கும் பாதுகாவலையும் நன்மைத் தனங்களையும் அறிந்திருக்க வேண்டும். அவர்களிடமும் நாம் செபிக்க வேண்டும். இந்த உணர்வை எமது பிள்ளைகளுக்கும் ஊட்டி அவர்களையும் செபிக்க உற்சாகப்படுத்துவோம்.

4ம் திகதி தூய பிரான்சிஸ் அசிசியாரின் விழா. செல்வந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் இயேசுவால் மனமாற்றம் பெற்று ஏழ்மைக்கு எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந்தவர். இயற்கையை பெரிதும் விரும்பி இயற்கையோடு ஒன்றித்துப் போனவர். எமது மறைமாவட்டத்தில் தூய பிரான்சிஸ் அசிசியார் ஆரம்பித்த சபையைச் சேர்ந்த அருட்தந்தை அலெக்ஸ் பேராலயப் பங்கில் உதவித் தந்தையாகவும் அருட்தந்தை ஆரோக்கியசாமி பாலையூற்றுப் பங்கில் உதவித் தந்தையாகவும் பணியாற்றுகின்றார்கள். இவர்களை நாம் வாழ்த்துகிறோம். இவர்கள் பணி சிறக்க செபிப்போம்.

இம்மாதம் 5ம் திகதி கத்தோலிக்க ஆசிரியர் தினமாகும். ஆசிரியர் பணி புனிதமான பணி எதிர்கால சமூகத்தை, நற்பிரஜைகளை உருவாக்கும் பணி. கத்தோலிக்க ஆசிரியர்கள் மாணவர் மத்தியில் நற்பண்புகளையும் கிறிஸ்தவ விழுமியங்களையும் தமது வாழ்வாலும், போதனையாலும் வளர்க்கக் கடமைப்பட்டுள்ளார்கள். இவர்களை நாம் பாராட்டுகின்றோம். பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

➤ தொடர்ச்சி 6ம் பக்கம்

## அலை ஓசை கலைத் தொடர்பகத்தால் நடாத்தப்பட்ட இயல் இசை நாடகப் பயிற்சிப் பட்டறை



எமது திருகோணமலை மறைமாவட்டத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் அலை ஓசைக் கலைத் தொடர்பகம் தனது முதலாவது செயற்திட்டமான "இயல், இசை, நாடகப் பயிற்சிப் பட்டறையை மிகச் சிறப்பாக செயற்படுத்தி தம் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. அந்த வகையில் எமது அலை ஓசை கலைத் தொடர்பகத்தின் இயக்குனர் அருட்பணி ஏ. றொகான் பேணாட் தலைமையிலும் எமது புதிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேலின் ஆசீருடனும் 2015.08.28,29 ஆகிய இரு தினங்கள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை மேய்ப்புப் பணி நிலையத்தில் இடம் பெற்றது.

இப்பயிற்சிப் பாசறையில் அனைத்துப் பங்குகளில் இருந்து வருகை தந்திருந்த 22 பயிற்சியாளர்கள் கலந்து பயனடைந்தனர். காலை 09.10 மணிக்கு இறைவணக்கத்துடன் அன்றைய முதல் நாள் நிகழ்வானது இனிதே ஆரம்பமானது.

இயக்குனர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்றதோடு அப்பயிற்சிப் பட்டறை பற்றியும் கிறிஸ்தவ கலை இலக்கிய பேரவைக்கு பயிற்சி பெற வந்திருக்கும் நீங்களே முதல் உறுப்பினர்கள் என்றும் மார்கழி மாதம் பிரம்மாண்டமான கலை விழா ஒன்று நடத்தவுள்ளதாகவும் அத்தோடு கலைத்திறன்களை வெளிக்கொணரும் நோக்கில் மாதாந்த சஞ்சிகை ஒன்றும் வெளியிட இருப்பதாகவும் கூறி "அலை ஓசை" கலைத் தொடர்பகத்தின் செயற் திட்டங்களையும் முன்வைத்தார்.

தொடர்ச்சி பக்கம் 05

## இலங்கை கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான தியானம்



இலங்கை கத்தோலிக்க இளைஞர், யுவதிகளுக்கான பத்து நாள் தியானம் இந்தியாவில் உள்ள கொச்சின் (Divine) நிலையத்தில் நடைபெற்றது. இலங்கையிலிருந்து எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் இரண்டு அருட்தந்தையர்கள், இரண்டு அருட்சகோதரிகள் உட்பட 48 இளையோர் கலந்து பயன் பெற்றனர்.

எமது மறைமாவட்டத்தில் இருந்து பேராலயப் பங்கைச் சேர்ந்த செல்வி மிஸ்ரியா, குவாடலூப்பே பங்கைச் சேர்ந்த செல்வன் புவனதாஸ், உவர்மலைப் பங்கைச் சேர்ந்த செல்வன் சஜீப் பம்பஸ்டன், பாலையூற்று (அன்புவழிபுரம்) பங்கைச் சேர்ந்த செல்வி சகாய தர்சிகா, ஆகியோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வுக்கு ஒழுங்கமைத்து தந்த தேசிய இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி ஹிகான் அவர்களுக்கும், எமது மறைமாவட்ட ஆயர் அதி. வந்தனைக்குரிய கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவல் அவர்களுக்கும், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் அருட்பணி ஜோன்பிள்ளை அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம். மேலும் "நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" போன்று இவ்வாறான கருத்தமர்வு, தியானங்களுக்கு எங்களைப் போன்ற இளைஞர், யுவதிகளுக்கும் வாய்ப்பளித்து அவர்களும் இறைவனைச் சுவைக்க, அனுபவத்தைப் பெற வழிசமைக்க வேண்டுகிறோம்.

அருட்பணி S.S ஜோன்பிள்ளை
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
திருகோணமலை மறைமாவட்டம்

**"ஆண்டவரின் நாள் வருகிறது ஆம் வருகின்றது அது வந்துவிட்டது." (யோவேல் 2: 1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் உங்களோடு பேச ஒரு வாய்ப்பு. இம் மாதம் பல முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கி உள்ளது. இம்மாதத்திலே உலகளாவிய ரீதியிலே ஆசிரியர் தினம் சிறப்பிக்கப்படுகின்றது. உண்மையில் ஆசிரியர் பணி என்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும் எதிர் காலம் இருண்டு விடாமல் எதிர்காலம் மறைந்து விடாமல் பிரகாசிக்க வேண்டுமானால் ஆசிரியர்களின் பணி வாழ்வு அங்கு சிறப்புற வேண்டும் சிறந்த நிலைகளை காண வேண்டும். எனவே ஆசிரியர்களின் 'சிறப்பு நாளிலே அனைத்து ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

மேலும் இம் மாதத்திலே செபமாலை அன்னையின் விழாவைக் கொண்டாடுகின்றோம் விழாக்களை வெறுமனே கொண்டாடுவது மட்டுமல்ல அந்த விழாவினூடாக வாழ்விலே நாங்கள் காணும் மாற்றங்களென்ன செபமாலைகளை வெறுமனே கழுத்தில் போடும் மாலைகளாக மட்டும் பாவனைப்படுத்தாமல் வாழ்வோடு இணைந்த உறவுப் பாலமாக அமையவும் வழிபாடாக இணைத்து பலன்களைக் கண்டடைவோம்.

இம் மாதத்திலே முதியோர் சிறுவர் தினங்களும் சிறப்பிக்கப்படுகின்றன. சிறுவர்களை சிறுவர்களாகவும் முதியோர்களை முதியோர்களாகவும் கணித்து வாழ வேண்டும். முதியோர் இல்லங்களைப் பார்க்கும் போது பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலைகளிலே முதியோர் இல்லத்தில் சேர்ந்து வாழ்கின்றார்கள். நமக்காக நாம் வாழ்வதற்காக நமது வளமான நிலைகளுக்காக நாமும் வாழ வேண்டும்.

சிறுவர்களை நோக்கும் போது இன்று சிறுவர்களைப் பார்ப்பது மிகவும் கேவலமாக உள்ளது வன்முறைகள் பாலியல் வன்முறைகள் என விரிந்து கொண்டு போகின்றது. ஆனால் அவர்களின் வாழ்வு மிகவும் கீழ்நோக்கிப் போகின்றது இவ்விதமான அநாகரிக நிலைகள் சுட்டெரிக்கப்பட்படுவதோடு எதிர்கால சந்ததியான சிறுவர்களை கண்ணியமாகவும் அன்பாகவும் பேணவும் வழிநடத்தவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மேலும் தூயவர்களான குழந்தை திரேசா யூதாததேயு புனிதர்களையும் நினைவு கூர்ந்து சிறப்பிக்கின்றோம். மனிதர்களாய் வாழ்ந்து புனித நிலைகளை கண்டவர்கள் அவர்கள் காட்டிய பாதைகளில் நாமும் நடந்து நலன்களைக் காணுவோம்.

அரசியலை நோக்கும் போது பத்திரிகைகள், வானொலி தொலைக்காட்சி எல்லாவற்றிலும் ஜெனீவா மகா நாடு பற்றிய பேச்சுக்களே நிறைந்த வண்ணம் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் காணாமற் போனவர்கள் இன்னும் பிறந்த மண்ணிலே அடிவைக்காமல் பிற நாடுகளிலே புகலிடம் தேடி கண்டும் காணாமல் வாழவும் முடியாமலும் பரிதவிக்கும் உறவுகளை நினைவிற் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக முடிந்து விட்ட வன்முறைக் கலாசாரத்திற்கு தகுந்த பதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிறைவான விடுதலை வாழ்வும் கிடைக்கும், கிடைக்க வேண்டும் இதுவே அனைவரின் விருப்பமாகவும் இருக்கின்றது.


புலம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல புலம்பெயர முடியாமல் முடங்கிக் கிடக்கும் மக்களின் பொது வேண்டலாகவும் இருக்கின்றது.

எனவே நல்லவைகள் நிகழ வேண்டுவோம் நல்லவைகள் நிச்சயம் நிகழும் என்னும் நம்பிக்கையோடு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

### வத்திக்கான வானொலி........

சிறுவர்கள் காப்பக புதல்வியர் துறவு சபையைத் தோற்றுவித்த இத்தாலிய அருட்பணியாளர் அருளாளர் வின்சென்ஸோ க்ரோசி, சிலுவையின் சகோதரிகள் துறவு சபைத் தலைவியும், இஸ்பெயின் நாட்டவருமான அருளாளர் அமல உற்பவ அன்னையின் மரியா, பிரான்ஸ் நாட்டின் புனித குழந்தை தெரேசாவின் பெற்றோர் லூடோவிக்கோ மார்ட்டின், மரியா அஸேலியா கயூரின் ஆகியோருக்கு புனிதர் பட்டமளிக்கும் விழா, வரும் அக்டோபர் மாதம் 18ம் தேதி ஞாயிறன்று இடம் பெறும்.

# சேவை நலன் பாராட்டுதல். . .



முன்னையநாள் ஆயரும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் தலைவருமான பேரருட்தந்தை ஜோசப் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கட்கு 09. 09. 2015 அன்று எகெட் அலுவலகத்தில் தற்போதய மறைமாநில ஆயரும், எமது நிறுவனத்தின் தலைவருமான பேரருட்தந்தை கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் வழிகாட்டலில் இயக்குனர் அருட்பணி க. நிதிதாசன் மற்றும் பணியாளர்கள் இணைந்து மிக விமரிசையாக நன்றி பாராட்டி முன்னாள் ஆயர் அவர்களை கௌரவித்தார்கள். இச் சேவை நலன் பாராட்டும் நிகழ்வில் ஆயர் அவர்கள் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் தலைவராயிருந்து ஆற்றிய சேவைகள் அனைத்தும் நினைவு கூறப்பட்டன. அவரது சேவையைப் பாராட்டி அன்னாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்

சென்ற மாதத் தொடர்ச்சி.......

# மறைமாவட்ட பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார்



## மனிதனைப் புனிதனாக்கிய மன்றேசா குகை

1522ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 25ம் நாள் மன்றேசா மக்களுக்கு மறக்க முடியாத ஒரு பொன்நாள் ஆகும். அன்றைய தினம்தான் இனிகோ என்னும் இறையடியான் அவர்கள் நகரிலே காலடி வைத்த நன்னாள். ஆண்டுதோறும் இந்நாளை நினைவு கூர்ந்து கொண்டாடுவது இன்றும் அந்நகர மக்களின் வழக்கமாக உள்ளது.

மன்றேசா இயற்கை வளங்கள் நிறைந்த ஓர் அழகிய நகரம் ஆகும். உயர்ந்த மலைகளும், குறுகிய குன்றுகளும், குகைகளும் நிறைந்த இடமாகும். குகைகளையும் குன்றுகளையும் ஊடறுத்துப் பெருக்கெடுத்து ஓடும் கார்தோனர் ஆறு (River Cardoner) இந்நகரின் அழகுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. நடந்து வந்தகளைப்புத்தீர, சோர்ந்துபோன கால்களுக்கு வலுவூட்ட ஆற்றங்கரையிலே இளைப்பாற எண்ணினார்.

தெளிந்த நீரோடையிலே தாக சாந்திசெய்து கொண்டார். கார்தோனர் ஆற்றின் எதிர் முனையிலே இருந்த குகையும் மறு முனையிலே கண்ணுக்குத் தென்படும் வகையிலே காட்சியளித்த மொன்சராத் மலைத்தொகுதியும் அவரது கவனத்தை ஈர்த்திருக்க வேண்டும். குகையை நோக்கி நகர்ந்தார். அந்த இடத்திலே சிலநாட்கள் தங்குவதற்குத் தீர்மானித்தார். ஏறக்குறைய 11 மாதங்கள் இக்குகைதான் அவரது ஆன்மீக வாழ்விற்கு அத்திவாரக் கல்லாக அமையப் போகின்றதென்றோ, கார்தோனர் ஆற்றங்கரையிலே தான் அவர் இறை ஒளி (Divine Illumination) பெறப்போகின்றார் என்றோ அவர் அறிந்திருக்கவில்லை.

குகையிலே அவர் செலவிட்ட காலப்பகுதி இனிகோவின் வாழ்க்கையிலே ஒரு முக்கிய நிகழ்வாகும். அமைதியான சூழல் அவருக்கு அதிகமாகப் பிடித்திருந்தது. தினமும் ஆறு அல்லது ஏழு மணித்தியாலங்கள் இறைவனோடு செபத்திலும் தியானத்திலும் ஐக்கியமானார். மன்றேசா குகையில் இருந்து சிலமீற்றர் தொலைவில் உயர்ந்த மலைக்குன்றின் மீது அமைந்திருந்த 'வளித்துணை மாதா பேராலயம்' (Basilica of Our Lady of Gundance) அவரது ஆன்மீக தாகத்தைத் தீர்த்தது தினமும் திருப்பலியிலே பங்கு கொண்டு நற்கருணை உட்கொண்டார். ஆலயத்தில் நடைபெறும் வழிபாடுகளிலும் ஆர்வத்தோடு பங்கெடுத்தார். செபம், நாளாந்த வழிபாடு தவிர்ந்த ஏனைய நேரங்களில் மருத்துவ மனைக்குச் சென்று நோயளர்களைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் அவர்களோடு பகிர்ந்துகொள்வார். குறிப்பாக ஏழைகளின் புனித கிளாயார் சபையினரால் (Sister of the Poor Clares) வறியவர்களுக்கென நடாத்தப்பட்ட புனித லூசியாஸ் மருத்துவ மனைக்குச் சென்று நோயாளர்களைக் கழுவி சுத்தம் செய்து காயங்களுக்கு மருந்திட்டு இரக்கத்தையும் கருணையையும் பகிர்ந்து அவர்களுக்கு உதவியும் உற்சாகம் அளிப்பதும் அவரது நாளாந்த கடமைகளில் ஒன்றாகும்.

மருத்துவ மனைகளிலும் வழியில் சந்திக்கும் மனிதர்களோடும் இறைவனைப் பற்றிப் பேசி அவர்களது ஆன்மாக்களை நல்வழிப்படுத்தினார். நாளாந்தம் கடினதவ முயற்சிகளில் ஈடுபட்டார். போர்க்களத்திலே வீர வாளை ஏந்திச் சென்ற அவரது கரங்கள் கயிற்றினால் பின்னப்பட்ட சாட்டையால் அவரது திருமேனியைப் பதம் பார்த்தன. பலவகையான பட்டாடைகளை அணிந்த அவரது உடலை கம்பளிப் போர்வையால் மூடிக் கொண்டார். முழங்கால் வரை நீண்டகாலணிகள் அணிந்து பழக்கப்பட்ட அவரது கால்கள் மரக் கட்டையால் செய்யப்பட்ட மிதியடிகளை அணிந்து கொண்டன அழகிய நீண்ட சுருட்டையான முடியையும் நேர்த்தியான நகங்ளையும் மிடுக்காக வைத்திருக்க பல மணித்தியாலங்களைச் செலவிட்ட இனிகோ அவற்றைப் பராமரிப்பதை விட்டு நீளமாக வளரவிட்டார். மாட மாளிகையில் செல்வச் செழிப்போடு வாழ்ந்த அவருக்கு குகையே கோபுரம் ஆகியது. நாவுக்கு ருசியான உணவுகளை உண்டுகளித்தவர் ஒருவேளை உணவுக்காக பிச்சைப் பாத்திரம் ஏந்திச் சென்றார்.

வழியில் எதிர் கொண்ட சிலரின் குறிப்பாக செல்வச் சீமான்களின் கேலிக்கும் நகைப்பிற்கும் ஆளானார். ஆனால் அவர் மனம் தளரவில்லை உள்ளம் சோர்வடையவில்லை. மாறாக இவை அனைத்தையும் இறைவனின் மகிமைக்காகவென இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டார்.

செபத்திலும் கடும் தவத்திலும் நேரத்தைச் செலவிட்ட வேளைகளில் அலகையானவன் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கினான். மாற்றானின் சோதனையில் சிக்கி புயலில் தவிக்கும் படகைப்போல் அலைக்கழிக்கப்பட்டார். அடிக்கடி பல வண்ணக் கண்களைக் கொண்ட பாம்பின் வடிவிலே சாத்தான் அவருக்குத் தோன்றினான். வாழ்க்கையிலே விரக்தியடைந்து தற்கொலை செய்ய வேண்டும் என்ற சோதனை எழுந்த வேளைகளில் அன்னை மரியாள் குழந்தை இயேசுவுடன் அவருக்குத் தோன்றி அவரைத் திடப்படுத்தினார் என்னும் செய்தியினையும் அவர் எழுதிய குறிப்பேடுகள் விளக்கிநிற்கின்றன.

மன்றேசா குகையிலே அவர் பெற்ற இறையருள், ஆன்மீக ஒளி செபத்தின் பயனாகப் பெற்ற இறை அனுபவங்கள் உள்ளுணர்வுகள், உந்தல்கள் அனைத்தையும் சிறு குறிப்புகளாக எழுதிக் கொண்டார் இக் குறிப்பேடுகளைக் கண்ணும் கருத்துமாக பராமரித்ததுடன் அவர் சென்ற இடமெல்லாம் அவற்றை எடுத்துச் செல்வது அவரது வழக்கமாக உள்ளது. இந்தக் குறிப்பேடுகளில் இருந்து (Spiritual Diary) அவர் கைப்பட எழுதப்பட்ட குறிப்புகளே 'இன்னாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள்' என அழைக்கப்படுகின்றன. இவை 30 நாள் தியானம் என்றும் அழைக்கப்படுகிறது.

450 ஆண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்ட ஆன்மீகப் பயிற்சிகள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இன்று வரை திருத்தந்தையர்கள், குருக்கள், அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் என்று இலட்சக் கணக்கான ஆன்மாக்களை மாற்றி அவரது வாழ்க்கையைச் சீரமைத்து பரமனோடு ஒன்றிணைக்கும் **'ஞானப் பொக்கிசமாகத் திகழ்கிறது'** எனக் கூறுவது மிகையாகாது.

அருட்தந்தை அஞ்சலோ பொன்னையா இயே.ச.

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு



மானிடர் தொடக்கம் மாற்று உயிரினங்கள் வரை தாயன்புக்கு நிகரான உயர்ந்த உறவாக இருப்பது நட்பே நட்பின்றி இயங்காது இவ்வுலகம் என்று சொல்லத் தக்க வகையில் நட்பு அன்றைய இலக்கியங்கள் தொட்டு இன்றைய காலம் வரை இருந்த போதும் இன்றைய மாணவப் பருவ நட்பு தீய நடத்தைகளைச் செய்யத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

**"நட்பு என்பது திருவள்ளுவர் கூறியது போல உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு"** என இருக்க வேண்டும் அதாவது எமது ஆடை விலகுகின்ற போது கை எவ்வாறு உடன் சென்று சரி செய்யுமோ அது போல் துன்பம் வரும்போது கூட இருந்து உதவுவதே நட்பாகும் என்கின்றார்.

தமிழ் உலகம் போற்றும் சிறந்த மன்னனாகிய அதியமான் நரை திரை மூப்பின்றி வாழக்கூடிய நெல்லிக் கனியை ஔவை வாழ்வதற்காக கொடுத்தார். ஆனால் நாம் நண்பர்களைத் தீய வழியில் செல்வதற்காக நட்பை பயன்படுத்துகின்றோம். இப்பண்பை நாம் முற்றாக மாற்ற வேண்டாமா? சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

மாணவர்களாகிய நாம் தீயவர்களோடு நட்புக் கொள்ளும் போது அது அடியில் இருந்து நுனிக்கரும்பு வரை சாப்பிடுவது போன்று ஆரம்பத்தில் நன்றாக இனித்து பின் குறைந்து போகும். ஆனால் நல்லவரது நட்பு நுனியில் இருந்து அடிக்கரும்பு வரை சாப்பிடுவது போன்று இருக்கும், ஆரம்பத்தில் இனிப்பு சிறிதாக இருந்து பின்பு உயர்வு அடையும். எனவே நல்ல நண்பர்களாக இருந்து உயர்வடைவோம்.

**இயேசுராசா நீதா, திருச்சிலுவை கன்னியர் மடம்**

## அறிவினைப் பெறுவோமே

**Fr. N.C**

- **கவிதை வரிகளை நிரைப்படுத்துங்கள்**
- **எழுத்தில் மட்டும் நிரைபடுத்துங்கள்**
- **இலக்கமிட்டு நிரைபடுத்தினால் நிராகரிக்கப்படும்.**
- **இதோ கவிதை வரிகள்**

- மறையறிவுப் பணியிதனை
- இறை நிலை அறிவதனால்
- நிறைந்துள்ள உண்மைகளால்
- இறைவனை அறிந்திடவே
- மனங்களில் புகுத்தியவை
- இறைவழி கண்டிடவே
- மறைந்துள்ள உண்மைகளும்
- மாண்புற உயர்ந்திடவே
- வழிகள் பல காட்டுகின்ற
- மனங்களில் பதிந்திடவே
- இதயங்கள் மகிழ்ந்தோங்குமே.

எல்லோரும் சரியாக நிரைப்படுத்தினால் குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

- 1ம் பரிசு 400/=
- 2ம் பரிசு 300/=
- 3ம் பரிசு 200/=

# இறைவனின் துணை வேண்டுவோம்

**அருட்பணி N.C அருள்வரதன்**

தீயவர் அழிய வேண்டும்
என்பதல்ல
தீமைகளே அழிந்தொழிய வேண்டும்
வேதங்கள் கூறுகின்ற
வழி இதனில்
வாழ்வது ஒன்றித்து
இணைந்துவிட்டால்
தூயதே துலங்கி எங்கும்
துணைபுரிந்து நின்றிடுமே

வன்முறைகள் கட்டவிழ்ந்தால்
பின்
வார்த்தை இல்லை விபரிக்க
கொல்லும் பழி உணர்வு
கொடுமைகளும் பெருகுவதால்
இன்னலும் நிலைகளங்கு
ஓங்கியது உயர்ந்திடுமே

பழிகாரர் பாதகர்கள்
அழிந்தொழிய வேண்டும்
என்பதல்ல வாழ்வு
பழிகள் பாதகங்கள்
செயலின்றி அவைகள்
கைவிட்டுப் போய்விட்டால்
உண்மையில் நன்மைகளின்
உதய காலம் அதுவாகும்

யுத்தம் பெருகிநின்ற
காலமதில்
யுத்தக் கொடுமைகளை
எப்படித்தான் சொல்வோமோ
உயிரகள் உடமைகள்
இல்லிடங்கள் அழிபட்டு
அகதி என்னும் புது நாமம்
தாங்கித் தொலைந்து விட்ட
இயல்பு நிலைகளையே
இன்னுமே கண்டிடாமல்
ஏங்கித் தவிக்கின்ற வாழ்வுக்கு
என்னபதில் சொல்வோமோ

நமது நாடு நமது மக்களினம்
இந்த
நல்லெண்ண வாழ்வெங்கும்
வேண்டுமென்ற
சிந்தனைகள் மனங்களில்
பதிந்து விட்டால் பின்
விழிநீர்கள் மறைந்தழிந்து
வேதனைகள் கலைந்தே
மறைந்து போக
புதுவாழ்வே உதயமாகும்
உண்மையே
நிறைவான வாழ்வதனைக் காணவே
இறைவனே துணைபுரிய வேண்டுவோமே.

# குட்டிக்கதை ஒன்று

**Fr. N.C**

மரண வீடொன்று எல்லோரும் அழுது வடிக்கின்றார்கள் இறந்தவர் ஊரிலே மிகவும் பணக்காரர். அழுகின்றவர்களுடன் இன்னும் ஒருவனும் அழுகின்றான். இவன் ஒரு திருடன் இவன் இறந்தவரிடம் திருட வந்தவன் ஆனால் நிலமை இப்படி ஆகிவிட்டது இறந்தவரை நினைந்து உறவுகள், நண்பர்கள் எல்லோரும் அழுகின்றார்கள் ஆனால் தான் திருடமுன்னர் இவர் இறந்து விட்டாரே என்பது திருடனின் அழுகைக்கு காரணம்.

**ஆடு நனைகிறதென்று ஓனாய் அழுத கதைபோன்று உள்ளதல்லவா**

# செபமாலை சொல்லுவோம் அருள்மாலை சூட்டுவோம்

ஒக்டோபர் மாதம் நாம் அனைவரும் செபமாலை அன்னையின் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதுடன் ஒக்டோபர் மாதம் முழுவதும் செபமாலை சொல்லி செபமாலை மாதம் என இம் மாதத்தை பெருமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

செபமாலை பற்றி அறியாத தெரியாத கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இல்லையென்றே கூறலாம். ஏனெனில் செபமாலை என்பது மிகவும் பழமை வாய்ந்த, புகழ்மிக்க எல்லோரும் சுலபமாகச் சொல்லக் கூடிய செபமாகும்.

செபமாலையில் கிறஸ்துவின் வாழ்வு பற்றியும், நமது மீட்பின் வரலாறு பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. செபமாலை செபிக்கும்போது நமது சிந்தனைகளை ஒரு முகப்படுத்தி சிந்தித்து செவிகொடுத்து, தியானித்து நமது இதயத்திற்கும், அறிவிற்கும் தேவையானதைப் பெற்றுக் கொள்கிறோம். இதற்கு அன்னை மரியாளே ஒரு எடுத்துக்காட்டு.

**'மரியா இந் நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்'** (லூாக்.2:19)

செபமாலை அன்னையின் விழாவானது 07.05.1571 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்கள் துருக்கியரைத் தோற்கடித்து வெற்றி பெற்றதன் நினைவாக திருத்தந்தை 5ம் பத்திநாதர் **'வெற்றிகளின் அரசி'** எனும் விழாவைக் கொண்டாடும்படி அறிவித்தார். செபமாலை செபித்ததன் பயனாகத்தான் கிறிஸ்தவர்கள் துருக்கியரைத் தோற்கடித்தார்கள் என நம்பினார்கள். 1573ல் திருத்தந்தை 13ம் கிரகோரி உரோமை மறை மாவட்டத்தில் இந்த விழாவை **'தூய மரியாளின் செபமாலை'** என்ற பெயரில் கட்டாயமாகக் கொண்டாடும் படி ஆணை பிறப்பித்தார்.

1716ல் திருத்தந்தை 11ம் கிளமன்ட் இவ்விழாவை உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் ஒக்டோபர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையில் கொண்டாட வேண்டும் எனத் தெரிவித்தார். 1960ல் இவ்விழா மாற்றியமைக்கப் பட்டு **'செபமாலை அன்னை'** விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**'செபமாலை மரியாயின் செபம்'** என அழைக்கப்படுகின்றது. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 'இயேசுவின் மனுவுடல் ஏற்பை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் அந்த மனுவுருவான வார்த்தையின் தாயாகிய மரியாளின்றிப் புரிந்து கொள்ள முடியாது என்று மீட்பரின் தாய் (REDEMPTORIS MATERS) என்ற கடிதத்தில் விளக்கமாகச் சொல்வதைப் பார்க்கிறோம்.

செபமாலை என்பது மரியாயின் செயல்களில் மிகவும் சக்தி வாய்ந்த புகழ் மிக்க ஒன்றாகும். விவிலியத்தில் வருகின்ற நிகழ்வுகளை உள்ளடக்கியதால் இது விவிலிய செபம் (BIBLICAL PRAYER) என்றும் அழைக்கப்படுகின்றது.

மேலும் இயேசுவின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், மரணம், உயிப்பு மற்றும் அவரின் மகிமையை எடுத்துச் சொல்வதால் இது கிறிஸ்தியல் செபம் ( CHRISTOLOGICAL PRAYER) எனவும் அழைக்கப்படுகிறது. கர்த்தர் கற்பித்த செபத்தையும், பிதாவுக்கும் சுதனுக்கும்.. என்னும் செபத்தையும் செபமாலையின் போது திரும்பத் திரும்ப சொன்னாலும் இது தந்தை கடவுளின் செய்தியை மரியாளுக்கு கொண்டு வந்ததையும், பரிசுத்த ஆவி அன்னை மரியாள் மீது இறங்கி வந்ததை மனிதனாகப் பிறந்த கடவுளின் மகனுக்குத் தாயானதையும் இச்செபம் நமக்கு நினைவூட்டுகிறது. இச் செபத்தில் மரியாளின் மற்றும் இயேசுவின் வாழ்வையும், மீட்பின் வரலாற்றையும், கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் தியானிக்கின்றோம். மேலும் கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்து விண்ணகம் சென்றது வரை அன்னை மரியாளின் பரலோக, பூலோக அரசியாக முடி சூட்டப்பட்டது வரை மனத்தாலும், சிந்தனையாலும் நம்மை இணைக்கும் பாலமாக செபமாலை விளங்குகின்றது.

அன்னை மரியாள் தனது காட்சிகளிலெல்லாம் செபமாலையை செபிக்குமாறு கேட்டு வருகிறாள். 1858ல் லூர்த்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்குக் காட்சியளித்த பொழுது பெரிய செபமாலையைக் கையிலேந்தியவராக காட்சியளித்தார். 1917ல் பாத்திமா நகரில் லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ் என்ற மூன்று சிறுவர்களுக்கும் காட்சியளித்த போது செபமாலை செபியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இத்தகைய செபமாலையின் மகிமையை தூய தோமினிக் எல்லா இடங்களிலும் பரப்பி வந்தார். தூய லூயிஸ் பான்பர்ட் 'செபமாலை தக்கவிதத்தில் செபிக்கிறவன் ஒருபோதும் சேதம் ஆகமாட்டான் இதை நான் என் இரத்தத்தில் எழுதித்தர தயாராக இருக்கிறேன்' என்றார்.

செபமாலையைத் தினமும் சொல்லி மாதாவைப் போற்றிப் புகழாத மக்களில்லை. அவரிடம் மன்றாடிய பின் ஏமாற்றம் அடைந்தவரில்லை. அவரிடம் உதவி கேட்ட ஒருவனாகிலும் அவரால் கைவிடப் பட்டதில்லை. ஏனென்றால் அவரை நம்பி இரந்து கேட்பவர்களின் குறிப்பறிந்து ஓடோடி வந்து உதவி செய்வார். கானாவூர்த் திருமணத்தில் இரசம் தீர்ந்து போனதை அன்னை மரியாளே கண்டறிந்து தம் மகனிடம் சொல்லி உதவி செய்த வல்லமை படைத்தவர் அன்னை மரியா. கடவுளின் தாய் என்ற பெருமையில்லாமல் தாழ்ச்சியோடு எலிசபத்தம்மாளின் வீடு நோக்கி ஓடி சேவை செய்தவர் நமக்காக எப்பொழுதும் கடவுளிடம் பரிந்து பேசுபவர்.

எந்த ஆபத்து நேரத்திலும் செபம் சொல்வதிலும் செபமாலை செபிப்பதிலும் ஈடுபட்டால் அடையாத நன்மைகள் இல்லை. மிகவும் இரக்கமுள்ள தாயே... கிருபைதயாபரத்துக்கு... என்ற செபங்களையும் செபித்து மன்றாடினால் எல்லா ஆபத்திலிருந்தும், தீராத நோய்களையெல்லாம் குணமாக்கி, பூரண சுகம் தருகின்ற பாசமுள்ள தாய்.

உன்நாமம் சொல்லச் சொல்ல
என் நெஞ்சம் மகிழுமையா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உன் இன்பம் பெருகுமையா

**கலாபூசணம் புலவர் அரியநாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பில்லா உறவினால் மனிதத்திலேற்படும் வலிகள்

புவியில் வாழும் அனைத்து ஜீவராசிகளிலும் மனிதன் மட்டுமே தன்னுடைய இறுதி இலக்கின் அமைப்பாளன். உளவியலாளர் வில்லியம்ஸ் ஜேம்ஸ் என்பவரின் கருத்துப்படி மனித சந்ததியின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு யாதெனில் ஒவ்வொரு மனிதனும் தனது உள்ளக மனப்போக்கை மாற்றுவதன் மூலம் அவனது வாழ்கையின் வெளிப்புற அம்சங்களையும் மாற்றமுடியும் என்பதாகும்.

மனித உள்ளம் கள்ளமின்றி வெள்ளையாயிருக்கும் போது வெளிப்படும் வார்த்தைகள் வசீகரமானவை. நெறிப்படுத்தப்படும் செயற்பாடுகள் நேர்த்தியானவை பரிணமிக்கும் உறவுகள் பரிசுத்தமானவை. ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வும் வளரவும், அகமகிழவும், அன்பு செய்யப்படவுமே விரும்புகிறான்.

அன்பிலே மலர்வது வாழ்வு, அந்த அன்பு தடைப்பட்டுவிட்டால் வாழ்வில் வரட்சி ஏற்படுகிறது. அன்பிற்காக குழந்தைகள் ஏங்கித் துடிக்கின்றன. அன்பைத் தேடி இளம் உள்ளங்கள் காத்திருக்கின்றன. அன்பைக் காக்க முதியவர் பாடுபடுகின்றனர். ஏனெனில் அன்பு வாழ்வின் நிறைவளிக்கும் ஆக்க சக்தியாக அனுபவிக்கப்படுகின்றது.

எமது வீடுகளில் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டாலும் எம் உள்ளங்களில் அன்பில்லையேல் அங்கு அமைதி கிடைப்பதில்லை அன்பில்லா ஊரில் ஒற்றுமை குலைகின்றது. அன்பற்ற சமூகத்தில் சுயநலம் தாண்டவமாடுகின்றது.

இன்று உடல் நோயைவிட மனநோய் மிகுந்துள்ளதை நாம் காண்கின்றோம் உள மருத்துவர்களின் கருத்துப்படி எல்லா நோய்களும் அடிப்படையில் அன்பற்ற சூழ்நிலையிலேயே ஏற்படுகின்றது ஏனெனில் அன்பு மறக்கப்படும் போது பிரிவு நிலை, மனதில போராட்டம், மாறாட்டம், மருட்சி ஏற்படுகின்றது.

அன்பில்தான் அமைதி பிறக்க முடியும் அந்த அமைதியில் தான் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடு, போராட்டங்கள், மனச்சுமைகள் குறைக்கப்படுகின்றது. நாம் வாழும் இந்த பூமி வலிகளும், நோவுகளும், சிதைவுகளும், காயங்களும் கொண்ட மனித உள்ளங்களை கொண்டுள்ளது. இதனால் அன்பு செய்ய முடியாமல் அவதியுறுகின்றோம். பிறர் தரும் அன்பையும் அனுபவிக்க முடியாமல் தவிக்கின்றோம்.

மொட்டாக இருக்கும் மனித வாழ்க்கை இதழ் விரித்து மலர அன்பு அரவணைப்பு ஏற்றுக்கொள்ளல், புரிந்துகொள்ளும் உறவுகள் அனைத்தும் அத்தியவசியமாகின்றது. அன்பு பொறுமையுள்ளது. பொறாமைப்படாது, அன்பு இழிவானதைச் செய்யாது. தன்னலம் நாடாது, அன்பு தீவினையில் மகிழ்வுறாது, மாறாக உண்மையில் அது மகிழும், அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் அனைத்தையும் நம்பும். அனைத்திலும் மன உறுதியாக இருக்கும். எல்லாம் அழிந்து போனாலும் அன்பு ஒரு போதும் அழியாது என்னும் 1கொரி 13: 4 - 8 இறைவார்த்தைகள் அன்பின் தலைசிறந்த பண்புகள் பற்றி ஆணித்தரமாக விபரிக்கின்றது.

இத்தகைய அன்பை நாம் அனுபவிக்க கொடுத்துவைப்போமானால் நாம் இவ்வுலகில் வாழும் மிகவும் பாக்கியமானவர்கள் நாம் பழகும் அன்பு உள்ளங்கள் இத்தகைய இயல்புள்ளவர்களாக எப்போதும் இருப்பார்களாயின் எம் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை எமது வாழ்க்கை நீரோட்டத்தில் இவ்வகையான உள்ளங்களை சந்திப்பது அரிது. ஆனால் இவ்வுலகில் இல்லாமல் இல்லை ஆயினும் என்றும் மாறாத மறைந்திடாத அன்பு இறையன்பாகும்.

**"எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல
எப்படி வாழ்ந்தாய் என்பதுதான் முக்கியம்"**

ஒரு மனிதனால் எல்லோரும் திருப்திப்படும் விதமாக வாழ முடியாது. அப்படி வாழ முயற்சிப்பவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றான். ஆகவே தனக்கென்று ஒரு திடமான கொள்கையை வகுத்து அதனைத் தன் வாழ்நாளில் கடைபிடிக்க முயற்சிப்பவன் என்றுமே மகிழ்ச்சியாக இருப்பான் இப்படியானவர்களுக்கு சமதாயம் பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி அவர்களை சிறைக்கும், கொலைக் களத்திற்கும் அனுப்பலாம் இந்த நேரத்தில்தான் மனத்தூய்மையும், தைரியமும் வாழ்க்கைக்கு அவசியமாகின்றது.

இந்த இலட்சிய வாழ்வில் இம் மனிதன் இறந்தாலும் சமூகத்திலிருந்து ஒரு நிலைக்கு உயர்த்தப்பட்டு தானும் சமூகத்தில் சங்கமமாகி சமூகத்தினை தன்வயப்படுத்தும் மனிதனாக மாறுகின்றான்.

இப்படியாக இலட்சிய தீர்மானம் எடுத்தவர்கள் அற்ப ஆசைகளுக்கும் அற்ப விடயங்களுக்கும் இடமளிக்காது மனிதனை உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்பவர்கள் இப்படியாக சமுதாயத்திற்கு தமது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் போது தான் எதிர் பாராமலேயே ஏமாற்றங்களையும், தவறு செய்யாமலே தண்டனைகளையும் ஏற்க வேண்டி நேரிடும்.

காந்திக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு.......
கெனடிக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு.......
இந்திரா காந்திக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு......
பஸ்ரியன் அடிகளாருக்கு அளிக்கப்பட்ட வேட்டுக்கள்.....
ஜிம்பிறவுன் அடிகளாருக்கு அளிக்கப்பட்ட இம்சைகள்.......
சந்திரா பெர்னான்டோ அடிகளாருக்கு அளிக்கப்பட்ட வேட்டுக்கள்....

என வரிசையில் அடுக்கி செல்லக்கூடிய பல உத்தம தியாகிகள் எம் மண்ணில் வாழ்ந்து புதைக்கப்பட்டிருக்கின்றார்கள். எனினும் இலட்சியம் சார்பாக நேரிய முறையில் ஒன்றினைந்த மனம் எத்தகைய சவால்களையும் மோதல்களையும் சந்திக்கும் ஆற்றல் பெற்றிருக்கும். தூய்மையான மனத்திலே சிந்தனையின் வேகம் உயர்வாக்கப்பட்டு அதன் மூலம் உற்சாகம் குதித்தெழும்.

**"முழுமையாக உயிர்வாழும் மனிதனே
இறைவனின் மாட்சிமை ஆகும்"**

அருட்சகோதரி றோமலா. அ
திருச்சிலுவை கன்னியர் சபை

# குழந்தை இயேசுவின் தூய தெரேசாள்



இவர் 1873ல் பிறந்த 1889ம் ஆண்டு கார்மேல் சபையில் சேர்ந்தார். 1895ல் நவகன்னியரை கண்காணிக்கத் தொடங்கினார். ஒன்பது ஆண்டுகள் மட்டுமே துறவியாக வாழ்ந்தார். எனது தேவ அழைத்தல் **அன்பு செய்யவே என்ற விருது வாக்குடன்** தன் துறவற வாழ்வைக் கழித்தார். இவரது விருது வாக்கியம் பல துன்பங்களை சகிக்க இவருக்க பலம் பெற்றுத்தந்தது.

சிறு வயதில் ஒருமுறை இவர் கோவிலுக்குச் சென்று செபிக்கையில் செப புத்தகத்திலிருந்து ஒரு படம் கீழே விழுந்தது சிலுவையில் தொங்கிய இயேசு அதில் சித்தரிக்கப்பட்டிருந்தார். இயேசுவின் இரத்தம் பலருக்கு வீணாய்ப் போகிறதே என்று அன்றிலிருந்து ஏங்கி வாடினாள் மனந்திரும்ப மறுத்த ஒரு கொலை காரனை மனம் திரும்பும்படி தனது உணவு, உறக்கம், வேலை விளையாட்டுக்கள் அனைத்தையும் செபமாக மாற்றினாள்.

"பனிக்கட்டி போல் ஆத்துமங்கள் நரகத்தில் விழுந்து சேதமாகிக் கொண்டிருக்கின்றன. நாம் இயேசு வடிக்கிறார் அவருடைய பத்தினிகளாகிய நாம் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக அற்பக் காரியங்களுக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றோம்" என்பர். சரிவர சாப்பிடாததாலும் கடுமையான தவ முயற்சிகளை செய்ததாலும் இவருக்கு பல நோய்கள் வந்தன.

குறிப்பாக காச நோய் அவரை மிகவும் வாட்டியது "நான் இறந்து போவேன்கணக்கு கொடுக்க இயேசுவின் முன் செல்வேன் பெரியவர்களிடம் போகும் போது வெறுங்கையேடு போகக் கூடாது ஏதாவது காணிக்கை கொண்டு போக வேண்டும் நான் செபித்து ஒறுத்தல் செய்து மனந்திரும்பிய ஒருபாவியின் ஆன்மாவை என் கையில் எடுத்து செல்வேன் என் முயற்சியால் நரகத்தில் ஓர் ஆள் குறைந்தது, மோட்சத்தில் ஓர் ஆள் அதிகரித்து எனக் காணும் இயேசு உடனே என்னை மோட்சத்திற்கு எடுத்துக் கொள்வார் என்று தெரேசாள் தன் அக்காவிற்கு கடிதம் எழுதினாள். பாவிகளைக் காப்பாற்றவும் குருக்களுக்காக செபிக்கவுமே நான் கார்மேல் சபையில் சேரப்போகிறேன் இயேசுவை நேசிப்பதும் ஆன்மாக்களை காப்பாற்றுவதும் மக்கள் இயேசுவை நேசிக்கச் செய்வதுமே பூமியில் எனது ஒரே வேலை வெறும் 24 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த இம்மாபெரும் புனிதை 30. 09. 1897ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

ரொ. மேரி ரொஷானி
இலிங்கநகர், உவர்மலை

**வத்திக்கான் வானொலி.........**

எண்ணற்ற திருப்பயணிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இரக்கத்தின் சிறப்பு ஜூபிலி ஆண்டில், 2016ம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை, சனிக்கிழமைகளிலும் மாதத்திற்கு ஒன்று வீதம் திருத்தந்தையின் பொதுமறையுரைகள் இடம் பெறும் என்று திருத்தந்தை இல்லத் தலைவர் பேராயர் அவர்கள் ஜார்ஜ் கான்ஸ்வெய்ன் அறிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் பொறுப்புள்ளவர்களே

இம் மண்ணிலே வாழ அழைக்கப் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்களே ஏனெனில் குறிக்கோள், எதிர்நோக்கு இல்லாதவன் இறந்த உடலுக்கு ஒப்பானவன் ஆகவே ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் பொறுப்பு உள்ளவர்களாகவே வாழ்கின்றோம்.

அதிலும் கிறிஸ்தவர்களாகிய நாம் அதிகமாகவும் கட்டாயமாகவும் பொறுப்புணர்வு உள்ளவர்களே அன்று இறைவன் உலகைப் படைத்து (தொ.நூ 1: 28-31) மனிதரின் கையில் வளர்ச்சிக்காக கொடுக்கின்றார். என்பதை கற்றுள்ளோம் கொடுக்கப்பட்ட பொறுப்பிலிருந்து தவறுவதும் சீரான முறையில் செயலாற்றாததும் இறைவனுக்கு எதிராக குற்றம், தவறு செய்வதாகும். இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் திருமுழுக்கு பெற்று இறையாட்சியில் உயிரோட்டம் உள்ள இதயமாக கட்டியெழுப்பும் பணியிலே அழைக்கப்பட்டுள்ளோம் என்பது உண்மையே. ஒன்றுபட்டு உழைக்கவும் உரிமையுடன் கூடிய கடமையிலும் அழைப்பைப் பெற்றுள்ளோம் என்பதே திண்ணம் இவற்றை எல்லாம் செயற்படுத்த தூய ஆவியானவர் ஆளுகை செய்கின்றார்.

ஆனாலும் நாம் கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாகவே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு ஒன்று பயம், மற்றையது அடக்குமுறை இதிலிருந்து வெளிவர ஆண்டவரை இறுக பற்றிக்கொண்டு உண்மையோடும் நீதியோடும் செயற்பட வேண்டும். அதிலும் தூய பவுல் கூறுவது போன்று உழைக்காமல் உண்ணலாகாது என்பதற்கமைய இதுவே வெற்றிக்கு அடையாளமும் ஆகும்.

இன்று நாம் கிறிஸ்துவழியாக பெற்ற புதுப்பிறப்பின் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கிடையே மனித மாண்பிலும் செயற்பாட்டிலும் உண்மை சமத்துவம் நிலவுகிறது. (எண் 208) கூறுகிறது. அதனால்தான் கிறீஸ்துவின் திருச்சபை உயர்வு தாழ்வின்றி திகழ்கின்றது. இன்று ஒவ்வொருவரின் அழைப்பிற்கு ஏற்ற பணிகளும் பொறுப்புக்களும் உண்டு. இதனைக் கண்டு இயங்க தூய ஆவியானவரே வலுவூட்டுகிறார். இன்று விவிலியத்தில் காண்போமானால் உதாரணம் இறைவாக்கு உரைக்கும் பணியாளர் அதனை நம்பிக்கைக்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும்.

மற்றும் கற்றுக்கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கம் ஊட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடும் செயல் படுத்துவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முக மலர்ச்சியோடும் தாம் பெற்றுக் கொண்ட கொடைகளை பயன்படுத்த வேண்டும். அப்போது அங்கு திருச்சபை கட்டியெழுப்பப்படுகின்றது.

இது மறையுண்மையாகவே இருக்கின்றது. எனவே தான் கிறீஸ்தவர்களாகிய நாம் திருத்தந்தையையும் ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும் பொறுப்பு கூற முடியாது. காரணம் இறைவன் அன்றே எமக்கும் பொறுப்புக்களைத் தந்தார். அதை நாம் மறந்துவிட்டு பிறர்மேல் குற்றம் காண இயலாது. எனவே கிறீஸ்துவை எமது ஆதாயமாக்கிக் கொண்டு நற்செய்திகளாலும் நற்செயல்களாலும் பயணிப்போம்.

எங்கு மனித மாண்பும் மனித நேயமும் தேவைப்படுகின்றதோ அங்கே கிறீஸ்தவ விழுமியங்களுடன் உதவ வேண்டும். இதைத் தான் கிறீஸ்துவும் வாழ்ந்து காட்டினார் இறைமகன் மானிடரில் பொறுப்பு உள்ளவர் என்பதால்தானே பல பாடுகளையும், அவமானங்களையும், பழிச்சொற்களையும், தாழ்ச்சியோடு சுமந்து உயிரையும் கொடுத்து எம்மை தம் சொந்தமாக்கினார்.

இங்குதான் பொறுப்புள்ளவர் என்பதை வெள்ளிடை மலையாக படம் பிடித்துக் காட்டினார். இவ்வாறு மீட்பரை சுவைத்த நாம் பொறுப்புக்களினின்று தவறுகின்றோம். சிந்திப்போம் சிந்தனை தரும் விடையோ நான் என்ற பெருமையும், நிலையற்ற புகழுமே மனித உறவையும், இறை உறவையும் அழிக்கும் ஆயுதமே.

இதனால் நாம் எமது பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்வதில்லை இந்நிலையிலிருந்து விடுபட சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து நாமும் பொறுப்புள்ளவர்கள் என்பதை உணர்ந்து திருச்சபையின் பங்காளிகள் என்பதனையும் வாழ முயற்சிப்போம்.

விடையைத் தேடுவதில் சோம்பேறிகளாகின்றோம் திருச்சபையின் சட்டங்களையும் அன்புப் பணியையும் ஏற்ற வகையில் தெளிவுபடுத்த தவிக்கின்றோம் ஆனாலும் கலாச்சாரமும் பொருளாதாரமும் தடைக் கற்கள் என்கின்றோம் இயேசுவின் வாழ்க்கையிலும் வித்தியாசமான கலாச்சாரமும், பொருளாதாரமும் பிரச்சனையும் தானே கிறீஸ்து பொறுப்பு உள்ளவர்களாக வாழ்ந்தார்.

**எம் ஒவ்வொருவராலும் வாழ முடியாதா?**
**சிந்திப்போம்..................... செயல்படுவோம்**

## 'அலை ஓசை' கலைத் தொடர்பகமே வாழ்க!

கலையென்ற வார்த்தைக்கு
கருத்துண்டு என்றுரைத்த
அலையோசை கலைத் தொடர்பகமே
உன் புகழ் விசும்பைத்
தாண்டிச் செல்க!

கலையென்ற தாய் மடியில்
கள்ளமில்லா குழந்தைகள்
எம்மைத் துயிலச் செய்த
உன் பணி விண்மீனாய்
பரவி ஒளிர்க!

உடலுக்கு உற்சாகம் தர
உள்ளத்திற்கு புத்துணர்ச்சி தர
கவி வடிக்க கதை படிக்க
கலையொன்றே போதுமென்ற
நீ வாழ்க!

சிதறிய மக்களைச்
சேர்க்க வந்த
ஆபிரகாம் போல் - சிதறிய
கலைஞர்கள் எம்மை
சேர்த்த நீ வாழ்க!

ஓயாத அலை போல்
ஓயாத உன்
ஓராயிரம் முயற்சியால்
கலையை வளர்த்திடு!
கலைஞர்களை பெருக்கிடு!

மழை போன்ற உன்
பணியில் சிறுதுளி
போன்ற பணியை
உன் முதல் - குழந்தைகள்
எமக்கு அளித்திடு

இறை ஆசீயும்
கலை ஆசியும்
அலை போலடித்திட
கடல் போல் - உன்
பணியைத் தொடர்ந்திடு!

**இருதய நாதன் புலோமி மேரி அனிஸ்டா**
**தூய வனத்து அந்தோனியார் பங்கு**
**செல்வநாயகபுரம்**

## அலை ஓசை....

☛ முதலாம் பக்கத் தொடர்ச்சி

மறைமாநில ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் ஆசியுரையில் இந்த **"அலை ஓசைக்"** கலைத் தொடர்பகத்தால் செயற்படுத்தப்படும் அனைத்து செயற் திட்டங்களுக்கும் மறைமாவட்டத்தில் உள்ள பங்குகள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் எமது குறிக்கோளானது இறைவனின் நல்ல செய்தியை உலகிற்கு கொடுப்பதாகும். ஆகவே எமது திறமைகளை வெளிக் கொணர்ந்து இந்த இயல் இசை நாடக கலைகளின் ஊடாக எமது குறிக்கோளை இலகுவாக ஆற்ற முடியும் ஆதலால் இந்த இயல் இசை நாடகப் பட்டறையை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துங்கள் எனவும் கூறினார்.

இந்த இரு நாட்கள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை திறம்பட இடம் பெறுவதற்கு திருவாளர் எட்றின் பயஸ் மற்றும் திருமதி சுரேந்தினி மணிவண்ணன் என்போர் முக்கிய வளவாளர்களாக செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

**எழுத் தாற்றலை வளர்த்தல்** சம்பந்தமாக ஓய்வு பெற்ற ஆசிரியரும் எழுத்தாளருமான திரு அருளானந்தம் அவர்களும், **நாடகமும் அரங்கும்** என்னும் தலைப்பில் திரு அன்புமகன் அவர்களும் **நாடகம்**

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி~ 12

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ஆர். ஹன்சிகா | ~ மூதூர் |
| ஜெர்லின் அமலதாசன் | ~ பாலையூற்று |
| ஏஸ். மொரிஸ்ரலா | ~ பாலையூற்று |
| ஜி.கிஷோன் | ~ பாலையூற்று |
| சொ. கிக்ஷானியா | ~ சாம்பல்தீவு |
| ஆன். பிறிசில்டா | ~ இலிங்கநகர் |
| புருனோ ஜி. லெப்பன் | ~ பாலையூற்று |
| ஏஸ்.லெவானா | ~ பேராலயம் |
| ஜே. ஸ்டெபி | ~ பேராலயம் |
| ஈ.பி.டொய்கஷன் | ~ பாலையூற்று |
| மா.பற்றிமா | ~ அன்புவழிபுரம் |
| டானியா R.F | ~ பேராலயம் |
| த. டிலாசியா | ~ இலிங்கநகர் |
| எ. றஜிந்வரோனியஸ் | ~ நிலாவெளி |

தொடர்ச்சி 7ம் பக்கம்.....

## இறைவன்

இதமான இதய அறைகளிலே -
இரவலாக
அடைக்கலம் அடையும் அவனை
அனைவராலும் காணமுடியாது
நல்லோர் மனச்சிறைகளிலே

சிறைக் கைதியாக தங்கிவிடுவான்
தகாத வார்த்தைகளிடமும்
தவறுகள் செய்பவனிடமும்
தானாகவே ஒதுங்கி விடுவான்

வீசும் தென்றலையும் - பிரகாசிக்கும்
ஆதவனையும் மழலைப் பேச்சிலும்
தாயின் தெய்வீக வாக்கிலும்
இறைவன் உன்னை நேசிப்பான்

தவறுகளை உணர்பவனை
தண்டிக்க மாட்டார்
மாறாக வரங்களை வழங்குவான்
செய்யும் கடமைகளிலே
திருப்தி குடி கொண்டால் - அவன்
எம்முள் குடி கொள்ள வருவான்

J. ஸ்டெபி, பேராலயம்

## நான் நம்புகிறேன்



ஆண்டுதோறும் வந்திடுமே
சிறுவர் தினம்
சிறுவர் எமக்கு கொடுத்திடுவர்
உரிமைகள் பல ~ அதில்
ஒன்றேனும் சரியாக கடைபிடித்தால்
நடந்திடுமே எமக்கு
எதிரான வன்முறைகள்

காத்திடுவீர்கள் எம்
உரிமைகளை ஏட்டுவடிவில்
கூறிடுவீர்கள் நாளைய தலைவர்கள்
நீங்கள் என்று ~ ஆனால்
அகப்பட்டதே எம் வாழ்வு
கயவர் கையில்

**யார் வருவார் எம்மை மீட்க இறைவா**
**நீர் வருவீர் என நான் நம்புகிறேன்**

D.இவேஞ்சலின், உவர்மலை

**நாடகக்கதை அமைத்தல்** பிரதி வடிவமைத்தல் தொடர்பாக அருட்பணி ஏ. றொஹான் பேணாட் அவர்களும் பயிற்சிகளை வழங்கினார்கள்.

இவ்விரு நாட்கள் வதிவிடப் பயிற்சியின் முக்கிய நிகழ்வாக **யோகா பயிற்சி** திரு ஏ. முருகதாஸ் என்பவரால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும் இரண்டாம் நாளின் இறுதி நிகழ்வுகளாக கலாச்சாரத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதோடு சிறப்பு உரை அருட்பணி அலெக்ஸ் செல்லையா அவர்களினால் வழங்கப்பட்டு போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்களும் பயிற்சியில் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

தகவல் F.S. ஜெனிஸ் ஜோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை நீங்கள் ஏன் புரிந்து கொள்வதில்லை?

"என்னை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை / புரிந்து கொள்வதில்லை?", "அவன்/ அவள், அவளை/ அவனை சரியாகப் புரிந்து கொள்வதில்லை", "நான் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை", இவ்வாறு பலர் பல விதத்தில் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். "நான் அவளை/ அவனை சரியாகப் புரிந்துகொண்டுள்ளேனா?, ஏன? என்னை நானே புரிந்துகொண்டேனா என்று நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேள்வி கேட்பது மிக மிக முக்கியமானதாகிறது. ஏனென்றால், "எங்களை நீங்கள் ஏன் புரிந்து கொள்வதில்லை?" என்ற ஆதங்க வினா, இன்று உலகின் பல பாகங்களிலும் ஒலிக்கின்றது. இந்த அவலக் குரல் மழலைகளின் இதயத்தில் இருந்து பிறக்கின்ற போது, இதயம் வெடித்துவிடும் போலிருக்கின்றது.

கருவறையிலிருந்து கல்லறைவரை, அநேகமானோர் இன்று பெருமூச்சிறைத்து முணுமுணுக்கும் பரிதாபகர வார்த்தைகள் இவை. கருவறையிலிருக்கும் ஓர் சிசு, "அம்மா! என்னைக் கொல்லாதே" என அலறுவது, "என்னையும் வாழ விடு" என அவலக் குரல் எழுப்புவது, "நானும் இப் பூவுலகில் பிறந்து வாழ வேண்டும்.

என்பதை ஏன் மறுக்கிறாய் / மறக்கிறாய்?, "என்னை நீ ஏன் புரிந்து கொள்வதில்லை?" என்றெல்லாம் அலறும் கருவறைச் சிசுக்களின் பரிதாப வேண்டுகோள்கள், எத்தனை கர்ப்பமான தாய்மார்களது, இக்குழந்தை வேண்டாம் என்றுரைக்கும் தந்தையர்களது, அவர்தம் உறவினர்களது கல்லான இதயங்களின் காதுகளுக்கு எட்டுகிறது?

"இக் குழந்தை எமக்கு வேண்டாம்" என, தாய் / தந்தை அல்லது இருவருமே நினைப்பது அல்லது பேசிக்கொள்வது, கருவிலிருக்கும் சிசுவிற்கு கேட்காமலிருப்பதில்லை. அவ்வாறு கேட்கின்றபோது, புதிதாக உருவான அவ்விளம் தளிர், வாடி சுருங்கிப் போகிறது. மனித நாசகார செயற்பாடுகளிற்கும் (கருக்கலைப்பு) அப்பாற்பட்டு இச் சிசு வெளி யுலகைக் காணும் போது, ஏனைய குழந்தைகளைப் போலல்லாமல் பயத்திலும் நம்பிக்கையற்ற நிலையிலுமே வாழத் தொடங்குகின்றது. "கருவிலே என்னை அழிக்க நினைத்தவர்கள், இப்போதும் என்னை அழிக்க பார்க்கலாம்", "எப்போது என்னை அழிக்க முயல்வார்களோ!" என பல வித சந்தேகங்கள், பயம், நிரந்தரமற்ற, பாதுகாப்பற்ற மன நிலையிலேயே வளர்கின்ற அவலம் ஏற்படுகின்றது. அன்பு, பாசம், கருணை, ஆதரவு, அரவணைப்பு, ஏற்றுக் கொள்ளல், மன்னிப்பு என்பவற்றை இக் குழந்தைகள் அனுபவிக்க அதிஷ்டமற்றுப் போகிறார்கள். அவ்வாறான மனநிலையில், சூழ்நிலையில் வளருகின்ற குழந்தைகள் எப்பொழுதுமே உடல் உள உபாதைகளுக்கு உட்பட்டவர்களாக, எப்பொழுதும் இவ்வுலகையும் மனிதர்களையும் சந்தேகமாக, பாதுகாப்பற்றவர்களாகவே பார்க்கின்ற துர்ப்பாக்கியம் உருவாகின்றது.

இன்னும் சில குழந்தைகள் மேற்கண்ட அவலத்திற்குள் சிக்காமல், நல்ல நிலையில் பிறந்தவர்களாக இருப்பினும், இவர்கள் பாடசாலைக்கு வரும் போது, இவர்களது நடத்தைகள், வித்தியாசமானதாக ஆரோக்கியமற்றதாக இருக்கும். ஏன்? இவ்வாறான குழந்தைகளின், பிஞ்சு மனங்கள், வீட்டில் நடக்கின்ற சம்பவங்களால் பாதிக்கப் பட்டிருக்கும். அதை அவர்களால் முறையாக வெளிப்படுத்த முடியாமல் தவித்து இறுதியாக தமது நடத்தையில் வெளிக் கொணர்வர்.

வீட்டில் அமைதியற்ற சூழல், தாய் தந்தையருக்கிடையே ஓயாத சண்டை சச்சரவு, அயலவருடன் பிணக்கு, பிளவுகள் என்று அல்லும் பகலும், கண்டும் கேட்டும் வளர்கின்ற பிள்ளைகள், வகுப்பில் படிக்க ஆர்வமற்றவர்களாக, நன்னடத்தையில் குறைவாக, சக மாணவ மாணவியரை தொல்லைப் படுத்துபவாகளாக, ஆசிரியர், பெரியோர் சொல் கேளாதவர்களாக, பண்பாடு, பழக்கவழக்கங்களை பழகிக் கொள்ள மறுப்பவர்களாகவே இருப்பர். இவ்வாறான குழந்தைகளின் இப்படிப்பட்ட ஆரோக்கியமற்ற சூழ்நிலை அவர்களது எதிர்காலத்தையே சூன்யமாக மாற்றிவிடுகின்றது. இவர்களது பிஞ்சு மனங்கள், பலதரப்பட்ட சந்தேகங்களாலும், கேள்விகளாலும், குழப்பங்களாலும் நிறைந்து அவர்களது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகிறது. படிப்பில் ஆர்வமற்று நேரத்தை வீணடிக்கும் குழந்தைகளின் உள்ளத்தை நோக்கினால், அது நொருங்கி போயிருக்கும். காரணத்தைத் தேடினால் பெற்றோர் பிரிந்து வாழ்பவர்களாக, விவாகரத்துப் பெற்றவர்களாக, மாற்றானோடு அல்லது மாற்றாளோடு கூடி வாழ்பராக, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக குடும்பத்தை பிரிந்திருப்பவர்களாக, மாறாத நோயினால் பீடிக்கப்பட்டவர்களாக இருப்பர்.

இவ்வாறான பெற்றோரின் குறைபாடுகளினால், குழந்தைகள் பாதிக்கப்பட்டு வீட்டிற்கும் நாட்டிற்கும் தொல்லை தருபவர்களாக மாறிவிடுகின்றனர். "இவர்களது தொல்லைகளை தாங்க முடியாது",

தொடரும்......

1ம் பக்கத் தொடர்ச்சி....

## தேவ அழைத்தல்கள்

**'அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு'** எனும் ஆண்டவரின் வாக்கு இன்றும் அர்த்தமுள்ளதாக உள்ளன. இறைவனின் தோட்டத்தில் பணி செய்ய பல இளைஞர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். ஆனாலும் பணிக்கென குருக்கள் துறவறத்தவர்க்கான தேவை இருந்த வண்ணமே உள்ளது.

எமது மறைமாவட்டம் தனி மறைமாவட்டமாக 2012ல் அறிவிக்கப்பட்டபோது ஒன்பது பங்குகளே இருந்தன. ஆனால் விசுவாசிகளின் நலன்கருதி இவை தற்போது 15 பங்குகளாக உள்ளன.

தற்போது எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் 21. இவர்களுள் வெளிநாடுகளில் உயர்கல்வி கற்போர், மட்டக்களப்பில் பணிசெய்வோர், பணி ஓய்வு பெற்றோர் என்று பலர் அடங்குவர். இன்னும் உயர்கல்விக்கென சிலர் அனுப்பப்படவுள்ளனர். தற்போது மறைமாவட்டத்தில் துறவறத்தவர் அடங்கலாக 31 குருக்கள் உள்ளனர். இவர்களுள் பங்குத் தந்தையர். உதவிப் பங்குத் தந்தையர், ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள், ஓய்வ பெற்றவர்கள் என அடங்குவர். தூய யோசப் வாஸ் சிறிய குருமடத்தில் 8 மாணவர்களே உள்ளனர். தற்போது கண்டி தேசிய குருமடத்தில் இரண்டு மாணவர்கள் மெய்யியல் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் இறையியல் கல்வியை முடித்துவிட்டு குருப்பட்டத்திற்காக தன்னை தயார் செய்கிறார்.

எனவே தேவ அழைத்தல்களை ஊக்குவிக்கவென குருக்கள் மட்டத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இப்பணி ஆயருடைய, அல்லது குருமட அதிபருடைய பணியல்ல. அனைவரும் ஒருமித்து செயல்பட வேண்டும். எனவே எமது மறைமாவட்டத்தில் தேவ அழைத்தலை ஊக்குவிக்க குருக்கள். துறவற சகோதரிகள், சகோதரர்கள், பங்குமக்கள், பெற்றோர் அனைவரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். எனவே நாம் செய்ய வேண்டியவை:

1. குடும்பத்திலும், பங்கிலும் பணிக்கான ஆர்வத்தை ஊட்டுதல்
2. குடும்பத்திலும், பங்கிலும் தேவ அழைத்தலுக்காக செபித்தல்.
3. கருத்தரங்குகள், கலந்துரையாடல் மூலமாக மாணவர் மத்தியில் தேவ அழைத்தலை இனம் கண்டு அவர்களை ஊக்குவித்தல்.
4. குருமட அதிபர் பங்குகளில் மாணவர்களை சந்தித்தல்.
5. குடும்பங்களில் நாளாந்த செபத்தையும் ஆன்மீகத்தையும் ஊக்கப்படுத்தல்.
6. குருமட மாணவர்களின் கல்விக்காக மாதாந்த நிதியுதவி செய்தல்.

தேவ அழைத்தல் என்பது புனிதமானது, மறைபொருள் இறைவனின் அழைப்பை நாம் தட்டிக்கழிக்கவும் கூடாது தடுக்கவும் கூடாது. எமது மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் பெருக நம்பிக்கையோடு செபிப்போம். ஒன்றுபட்டு உழைப்போம், ஆர்வத்தோடு பங்களிப்போம்.

**'துணிச்சல் இல்லாத இளைஞர் ஏற்கெனவே ஓய்வுபெற்ற இளைய முதியவர்'** என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். இன்று இளைஞர்கள் துணிவோடு முன்வந்து பணி செய்ய உற்சாகப்படுத்துவோம்.

இம்மாதம் பல சர்வதேச தினங்களைக் கொண்டதாக உள்ளது. உலக சிறுவர், முதியோர் தினம் (01), சர்வதேச மது ஒழிப்பு, உயிரினங்கள் தினம் (03), உலக சிறுமியர் தினம் (05), சர்வதேச ஆசிரியர் தினம்(06), சர்வதேச அஞ்சல் தினம் (09), உலக உளச் சகோதர தினம்(10), சர்வதேச விழிப்புலனற்றோர் தினம்(15), சர்வதேச உணவு தினம் (16), சர்வதேச வறுமை ஒழிப்புத்தினம் (17), சர்வதேச விவசாய தினம் (21), ஐக்கிய நாடுகள் தினம்(24), சர்வதேச சேமிப்பு தினம்(30).

பல விழிப்புணர்வுகளைத் தந்து அடுத்தவர் நிலை உணர்ந்து, பங்களிப்பும் பணியும் செய்யத் தூண்டும் மாதமாக இம்மாதம் அமைந்துள்ளது. அடுத்தவர் நலனில் அக்கறையோடு பங்கேற்போம்.

**ஒருவர் ஒருவருக்காக செபிப்போம், எம்மை அர்ப்பணிப்போம்**

அதி. வந்.கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல்
ஆயர்
திருகோணமலை மறைமாவட்டம்
திருகோணமலை.

## சிறுகதை

## ஒரு வரலாற்று உண்மை

ஒரு முறை பார்சிலோனா மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு கால் விளங்காமல் முடக்கு வாதத்தால் அவதியுற்றான் லூர்த்து நகருக்கு செல்ல வேண்டும் என ஆவல் கொண்டான்.அவன் தாய் அவனுடைய உடையை எடுத்து பையில் வைத்துக் கொண்டிருந்த போது சிறுவன் புதிதாய் வாங்கிய காலுரையை தாயிடம் கொடுத்து பையில் வைக்கச் சொன்னான் தாய் அவனிடம் மகனே உனது காலில் நீ காலுரையை போட முடியாது பிறகு ஏன் காலுரையை பையில் வைக்கச் சொல்கிறாய் எனக் கேட்டான் அதற்கு பையன் அம்மா லூர்த்து நகருக்கு போகும் போது காலுரை எனக்கு தேவைப்படாது தான் ஆனால் திரும்பி வரும் போது நிச்சயம் தேவைப்படும் என்றானாம் அதே போல அவன் குணமடைந்து சாட்சியம் சொன்ன போது பார்சிலோ ஆயர் நேரில் சென்று அவனை வாழ்த்தி ஆசீர்வதித்தாராம்

ரொ. மேரி ரொஷானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 14
## திருத்தூதர் பணி அதிகாரம் 05 - 08

**அன்பார்ந்த வாசகர்களே**

“விடுபட்ட எழுத்துப்புதிர்” போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.

1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 14. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 10. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பா | | | | | | | ■ | கொ | |
| ■ | தீ | | | | | | | | |
| ஆ | ■ | சா | | | | ■ | ■ | | |
| | வா | ■ | உ | | | | ■ | | |
| | | ■ | | | | | நா | | |
| | | இ | | | | | | | |
| | | ■ | | | | க | ■ | | |
| | | ■ | ■ | | | | ஸ் | ■ | கு |
| | ■ | நி | | | | | | | |
| நா | | | | | | | | | |

1. சா......மோன் 2. கொதி........தெ.......ந்து
3. ஸ்தே.......ன் 4. நிலை........தி........ப்போம்
5. நசரே....ராகிய இ........சு 6. வா......குறு......
7. கு.....முதுவ.....கள் 8. க........கள் 9. தீப்பி......ம்.......ல்
10. பா...... நிலப் பா...... 11. ஆட்.....க் கு......டி
12. இளை......ர்க...... 13. நா.....தோ........ம் 14. உரோ.......ம்

பெயர் ..............................................
முகவரி ..............................................
பங்கு ..............................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 12
## தூய யோவான் நற்செய்தி
## அதி 19 - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ண் | ட | வ | ரை | க் | க | ண் | டோ | ம் |
| ■ | தி | ய் | தா | ம் | உ | ரே | வ | இ | ■ |
| ■ | ரா | பு | தி | ய | க | ல் | ல | றை | செ |
| ர் | ட் | ■ | ந | லை | நூ | ■ | மு | ■ | ந் |
| ர | சை | ன் | ம் | கா | று | ர் | ப் | வெ | நி |
| கா | இ | த | ப | ற் | மீ | ள | ப | ண் | ற |
| க் | ர | னி | மா | ய | ட் | வ | து | ணா | மே |
| ட | ச | ம | ட் | டி | ட | ணி | கி | டை | லு |
| ட் | ம் | தோ | டே | வி | ர் | பே | லோ | ■ | டை |
| தோ | ■ | இ | ன் | ள் | க | ன் | மீ | ■ | யை |

1. செந்நிற மேலுடையை 2. இதோ மனிதன் 3. இவரே உம் தாய் 4. திராட்சை இரசம் 5. முப்பது கிலோ 6. புதிய கல்லறை 7. வெண்ணாடை 8. தோட்டக்காரர் 9. ஆண்டவரைக் கண்டோம் 10. நம்ப மாட்டேன் 11. விடியற் காலை 12. மீன்கள் 13. நூறு மீட்டர் 14. பேணி வளர்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

**1ம் பரிசு 500/=**
செல்வன் டே. மெருஷியன் பிள்ளை
68, சகாயம் இல்லம்,
ஆசிரியர் சதுக்கம்
உவர்மலை

### பரிசுக்குரியவர்கள்:-

பங்குபற்றியோர் - 69பேர்
சரியானவிடையளித்தோர் - 61பேர்

**2ம் பரிசு 300/=**
செல்வி. L. S. பியூலா
இல.156/32, டொக்கியாட் வீதி,
திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
செல்வி. A.T. ஐதுஷனா
5ம் வட்டாரம்,
கும்புறுபிட்டி

L.D ஹர்சிக்கா ~ பாலையூற்று.
ரமேஷ் கிறேஷ்மா ~ இலிங்கநகர்
ஜே. ருக்சிக்கா ~ சாம்பல்தீவு
எஸ். நிலானி அனிற்றா ~ சாம்பல்தீவு
ஏ. பொனிஸ்கரன் ~ பள்ளத்தோட்டம்
யோ. அருஷியா ~ அன்புவழிபுரம்
ஜே. டெனா ~ இலிங்கநகர்
சே. அருள் டென்சில் ~ கன்னியா
த. மெரின்டன் ~ இலிங்கநகர்
அ. லக்ஷன் ~ குவாடலூபே
யோ. அருஷன் ~ அன்புவழிபுரம்
ஆர். எடின் டிலிசன் ~ அன்புவழிபுரம்
இ. ஜெசுரன் ~ பேராலயம்
இ.ஜொனத்தன் ~ பேராலயம்
ஜே. புளோரிடா ~ பேராலயம்
ஜே. டி. ஜெசிந்தா ~ இலிங்கநகர்
டோ. சொ. பியூலா ~ பேராலயம்
டி. சனோஜ் அன்டனி ~ உவர்மலை
சே. டெய்சி அனெற் ~ கன்னியா
ச. மெடோனா கிரிஷாந்தினி ~ இலிங்கநகர்
பி. மெர்வின் ~ முல்லைத்தீவு
அ. மரியாள் ~ கன்னியா
E. லினா சிஜேனி ~ நிலாவெளி
அ. கரோலின் கீர்த்திகா ~ பேராலயம்
எஸ். சிங்கராஜா ~ இலிங்கநகர்
டி. அனிஸ்ரன் ~ இலிங்கநகர்
பீ. றொக்சானி ~ கும்புறுபிட்டி
டி. இவேஞ்சலின் ~ உவர்மலை
ஆன் வஜீரா ~ பேராலயம்
எஸ். ஹன்சிகா ~ நிலாவெளி
ஜே. ஏ. ஸ்ரென்சியா ~ சாம்பல்தீவு
ஜே. பிரீத்தீ ~ நிலாவெளி
மு. அலிசா ~ கன்னியா
தே. சமில்டன் ~ நிலாவெளி
ஏ. ரோஜினி ~ பாலையூற்று.
ச. டே. வோறன் பிள்ளை ~ உவர்மலை
ஆர். எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்
வே. ஆன். டிலக்சிகா ~ கும்புறுபிட்டி
ரொ. ரியோனா ~ பேராலயம்
ம. பிரதீஸ் ~ பேராலயம்
ஜே. மெவன் ~ பேராலயம்
என். எஸ். நிர்மலின் ~ பாலையூற்று
ஆர். நிரோஷா ~ மூதூர்
வேஜின் டி குரூஸ் ~ அன்புவழிபுரம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 21
## நீதித் தலைவர்கள் 11 ~ 21 அதிகாரங்கள்

1. பெலிஸ்தியரின் தானியங்களை அழிக்கும் படி சிம்சோன் ஒரே வகையான 300 விலங்குகளை உபயோகித்தார் என்று விவிலியம் கூறுகின்றது அந்த விலங்கினம் எது?

   **விடை**..................................................

2. இப்தா தன் தந்தையின் வீட்டிலிருந்து வெளியேறிய பிறகு எங்கு வாழ்ந்து வந்தார்?

   **விடை**..................................................

3. பென்யமின் மக்களுக்கு எதிராக போர் தொடுக்க இஸ்ரயேலரை வழிநடத்தியது யார்?

   **விடை**..................................................

4. இப்தா எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

   **விடை**..................................................

5. ...................வுக்கும் ............. மிடையே இருக்கும் போது ஆண்டவரின் ஆவி சிம்சோனை தூண்டத் தொடங்கியது.

6. சிம்சோனின் வேடிக்கையைப் பார்க்க கூடியிருந்தோர் எத்தனை பேர்?

   **விடை**..................................................

7. **‘மன்றாடுவோரின் நீரூற்று’** என்பதன் பொருள்?

   **விடை**..................................................

8. **‘உண்பவனிடமிருந்து உணவு வெளிவந்தது வலியவனிடமிருந்து இனியது வந்தது’** இவ் விடுகதையின் விடை என்ன?

   **விடை**..................................................

9. பெத்ரகோபின் பள்ளத்தாக்கிலிருந்த நகரம் எது?

   **விடை**..................................................

10. ஏன் இஸ்ரயேலர் ஒவ்வொருவரும் அவரவர் பார்வையில்நேர்மையெனப்பட்டதைச் செய்து கொண்டிந்தனர் என நிதித்தலைவர்கள் நூல் குறிப்பிடுகின்றது?

    **விடை**..................................................

பெயர்: ....................................
முகவரி:....................................
பங்கு:....................................

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 19
## யோசுவா (13~24 அதிகாரங்கள்) விடைகள்

1. செக்கேமில் (24:01)
2. சான்று (22:34)
3. கைக்கொள்வ (23:06)
4. மேய்ச்சல் நிலங்களை (21:08)
5. நூனின் (19:51)
6. என் சகோதரர் (14:08)
7. லேவியர் (13:33)
8. சீலோவில் (18:01)
9. ஆசேர் குலம் (19:24)
10. 110 (24:29)

**பங்குபற்றியவர்கள்: 55 பேர்**
**மிகச்சரியான விடையளித்தோர்: 17 பேர்**

**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**



### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி. வஜீரா R.F
21/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை.

**2ம் பரிசு 300/=**
செல்வி. டெ. இவேஞ்சலின்,
10/4,கண்ணகிபுரம்,
உவர்மலை

**3ம் பரிசு 200/=**
செல்வி. மொரிஸ்ரலா. S
74,வேளாங்கண்ணி வீதி
பாலையூற்று

### பாராட்டுக்குரியவர்கள்

டெ. சனோஜ் உவர்மலை
இ. ஜெசானியா பேராலயம்
டானியலா R.F பேராலயம்
க. டிலூசியா இலிங்கநகர்
வி. தேவநேசன் இலிங்கநகர்
எக்ஸ். அருள் டொன்சில் கன்னியா
X. டெய்சி அனெற் கன்னியா
எம். அலிசா கன்னியா
தே. சமில்டன் நிலாவெளி
ம. விவியானி அன்புவழிபுரம்
ஜே. சாலினி குவாட்டலூப்பே
த. மெரின்டன் இலிங்கநகர்
ச. மெடோனா கிரிசாந்தினி இலிங்கநகர்
ஏப். ஆன். பிரிசில்டா இலிங்கநகர்

**குறிப்பு:** ***போட்டிகளுக்குரிய பரிசுத் தொகையை பரிசுக்குரியவர்கள் திருமறைக்கல்வி நிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

## மறைக்கல்வி கற்போம் ~ 11

01. குழந்தை இயேசுவின் சின்னத்தெரேசாவின் விழா நினைவு கூறும் நாள்?
    **ஐப்பசி 01**
02. தேசிய ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள்?
    **ஐப்பசி 06**
03. திருப்பாடல் 133 சகோதர அன்பைப்பற்றி எவ்வாறு விபரிக்கின்றது ?
    **சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை எத்துனை இனியது**
04. தந்தையரை மேம்படுத்துவோருக்கு கிடைக்கும் பலன் என்ன?
    **நீடுவாழ்வர் (சீராக் 3:6)**
05. மகன் தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை என்ன?
    **குழந்தாய் உன் தந்தையின் முதுமையில் அவருக்கு உதவு அவரது வாழ்நாள் எல்லாம் அவர் உள்ளத்தை புண் படுத்தாதே (சீராக் 3: 12)**
06. ஆபிரகாம் என்ற சொல்லுக்கு பொருள் என்ன ?
    **எண்ணற்ற நாடுகளுக்கு தந்தை**
07. உலக மறைபரப்பு ஞாயிறு எப்போது கொண்டாடப்படுகின்றது?
    **ஐப்பசி 18**
08. மறைபோதக நாடுகளின் பாதுகாவலியின் பெயர்?
    **குழுந்தை இசேுவின் திரேசம்மாள்**
09. ஐப்பசி 01ம் திகதி உலக நாடு யாரை நினைவு கூறுகிறது?
    **சிறுவர், முதியோர்**
10. வேதாகமத்தில் மிக குறுகிய வசனம் கொண்ட நூல் எது?
    **தூய யோவான் 11: 35**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதிய ஆயரை வரவேற்றல்



திருகோணமலை மறைமாவட்ட மரியாயின் சேனை சகோதரிகளால் எமது புதிய ஆயர் பேரருட்தந்தை கி.நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த 12.09.2015 அன்று சனிக்கிழமை தூய மரியாள் பேராலய கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, ஆயர் அவர்கள் தனது உரையில் மரியாயின் சேனைபக்தி, விசுவாசம், பங்கில் உள்ள பங்குத் தந்தையின் ஊடாக பங்குகளில் மரியாயின் சேனை வழியாக கட்டியெழுப்பப்பட்டு வந்ததற்கு தமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறினார்.

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

உதித்தது 10 10 1934



மறைந்தது 08 10 2009

## அமரர். சரவணை அந்தோனிப்பிள்ளை


'ஆறாத் துயரில் எம்மை விட்டுச் சென்ற அன்புத்தந்தை தினமும் உங்களை மனதில் எண்ணியே ஆறுதலடைகின்றோம். உமது வளர்ப்பினால் நாங்கள் பெருமைப்படுகின்றோம். எம்முடன் நீங்கள் இல்லையென்றாலும் இறையடியில் நீங்கள் இருப்பீர்கள் ஈர்மூன்று ஆண்டுகள் என்றாலும் ஈராயிரம் ஆண்டுகள் என்றாலும் என்றும் அணையாத தீபமாக திகழும் உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: A. கிளமன்ட் ஜீவதாஸ்
நிலாவெளி – 3

அன்பு மனைவி, பிள்ளைகள்

# தூய அன்னை வேளாங்கண்ணி ஆலய
## வருடாந்த திருவிழா பள்ளத்தோட்டம்





'கன்னிமையின் தூய்மையும், தாழ்ச்சியின் மேன்மையும் வார்த்தையின் உண்மையும் அன்பு விழிக் கருணையும் வாழ்லாக கொண்டமைந்த வேளாங்கண்ணி அமுதே நீர் வாழ்க'

இறைவனின் படைப்பில் எழிலாய்த் திகழும் திருகோணமலையின் நீலக்கடல் ஓரத்தில் பகலில் கதிரவன் ஒளியும், இரவில் நிலவொளியும் தெறிக்கும் பள்ளத்தோட்டம் எனும் அழகிய கிராமத்தில் அமைந்துள்ள அழகிய சோலை வனமே எம் அன்னை வேளாங்கண்ணி ஆலயம்.

இவ்வாலயத் திருவிழாவானது 21.08.2015 அன்று ஆரம்பமாகி 30. 08. 2015 அன்று திருவிழாவும் சிறப்பிக்கப்பட்டது. திருவிழாவன்று எம்புதிய ஆயர் அதிமேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களை வரவேற்று அவர் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலியும், முதல்நன்மை, உறுதிப்பூசுதல் போன்ற திருவருட்சாதனங்களும் வழங்கப்பட்டன. கொடி இறக்கத்துடன் ஆலயத் திருவிழா இனிதே நிறைவுற்றது.

பங்குத்தந்தையும், பங்குமக்களும்
பள்ளத்தோட்டம்

# வத்திக்கான் நிகழ்வுகள்

2015ம் ஆண்டு டிசம்பர் 08ம் திகதி அமல அன்னை பெருவிழாவன்று வத்திக்கான தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் புனிதக் கதவைத் திறந்து வைப்பதோடு இரக்கத்தின் ஜூபிலி ஆண்டு தொடங்குகிறது. டிசம்பர் 13ம் திகதி திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயின்று, உரோம் தூய ஜோன் இலாத்தரன் பசிலிக்கா, உரோம் தூய பவுல் பசிலிக்கா மற்றும் உலகின் அனைத்து பேராலயங்களின் தூயக் கதவுகள் திறக்கப்படும். 2016ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் வெள்ளிக்கிழமை உலக கத்தோலிக்க அமைதி தினத்தன்று, உரோம் மேரி மேஜர் பசிலிக்காவின் தூயக் கதவு திறக்கப்படும்.





# பாலையூற்று
## தூய லூர்த்து அன்னை திருத்தல
## பங்குத் தந்தையர்கள், இறை மக்களால்
## புதிய ஆயரை வரவேற்றல்

06.09.2015 அன்று தி/தூய லூர்த்து அன்னை றோ.க. வித்தியாலய மாணவர்கள் வாத்திய இசை இசைக்க ஆயர் வரவேற்கப்பட்டதுடன் ஆயரின் தலைமையில் பங்குத்தந்தையர்கள், அருட்பணி டே. அன்றூ ஸ்ரீபன் ஆகியோர் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

அதன் பின்பு அனா மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும், 2ம் தவணைப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் பாடங்களில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு ஆயரினால் பரிசில்கள் வழங்கப்பட்டது. மேலும் பாலையூற்று கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் வெள்ளிவிழா யூபிலி ஆயரினால் பிரகடனம் செய்யப்பட்டது.




'அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' (தூய மாற்கு 12:31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org